DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNCIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C.C No. 20/2023 |
| Deposition of witness | : | PW-6 |
| Name | : | ஜமுனா |
| Father's / Name | : | கோதண்டபாணி |
| Village | : | மயிலாடுதுறை |
| Taluk | : | மயிலாடுதுறை |
| Age | : | 37 |
| Occupation | : | மருத்துவர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 22nd day August 2024.
Accused absent petition U/sec. 317 Cr.P.C filed and allowed.

**முதல் விசாரணை:–**

நான் தற்போது மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 07.07.2022ம் தேதி இரவு 09.50 மணியளவில் மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் பணியில் இருந்த போது அன்சாரி என்பவரை அவரது நண்பர் ஹாஜா மை என்பவர் என்னிடம் சிகிச்சைக்காக வரப்பட்டார். அவரை நான் விசாரித்தபோது அன்று இரவு 07.52 மணியளவில் தெரிந்த ஒரு நபரால் அம்பகரத்தூர் சோதனை சாவடி அருகே பேருந்தில் நின்றுகொண்டு பயணம் செய்து வந்த போது பேருந்தில் இருந்து கீழே தள்ளிவிட்டதில் காயம் ஏற்பட்டதாக கூறினார். அவரை நான் பரிசோதித்த போது அவரது இடது காலில் வீக்கம் மற்றும் வலி இருந்ததாக கூறினார். இடது கை முட்டியில் சிராய்ப்பு காயம் காணப்பட்டது. அவருக்கு நான் முதலுதவி சிகிச்சையளித்து உள்நோயாளியாக அனுமதித்து மேல்சிகிச்சைக்காக திருவாரூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு பரிந்துரைத்தேன். அங்கு அவருக்கு சிகிச்சை முடித்து அவருக்கு இடது காலில் எலும்பு முறிவு கண்டறியப்பட்டது அதனால் அவரது காயமானது கொடுங்காயம் என்று சான்று வழங்கினேன். மேற்படி நபருக்கு நான் பதிவு செய்த விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்று **அ.சா.ஆ–4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி நபர் கூறிய வகையில் பேருந்திலிருந்து தள்ளப்பட்டிருந்தால் மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

நான் சிகிச்சையளித்த பொழுது எலும்பு முறிவா என்று உறுதி செய்யப்படவில்லை என்றால் சரிதான், ஆனால் எலும்பு முறிவுக்கு உண்டான வீக்கமும், அறிகுறியும் காணப்பட்டது. எக்ஸ்ரே எடுத்து பார்க்கப்பட்டதா என்றால் திருவாரூர் அரசு மருத்துவமனையில் எக்ஸ்ரே எடுத்து பார்க்கப்பட்டது. நான் அந்த எக்ஸ்ரே அறிக்கையை பார்வையிட்டேனா என்றால் இல்லை. திருவாரூர் அரசு மருத்துவமனையின் மருத்துவ ஆவணங்கள் அடிப்படையில் தான் நான் கருத்துரை வழங்கியுள்ளேன். வேகத்தடையில் இடறிவிழுந்தால்கூட மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.

(ஒம். M.S. பாரதிதாசன்)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், நன்னிலம்.